# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 13 வியாழக்கிழமை 27.06.2024 கதிர் 283







# ரணிலின் உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்

## இப்படிக் கிண்டலடிக்கின்றார் சஜித்



**நாட்டு மக்களுக்குப்பொய்களைக்கொட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய உரை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

2▶




## பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் வவுனியாவில் இன்று கவனவீர்ப்பு ஊர்வலம்



வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர்கள் இன்று கவனவீர்ப்பு ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை பூராகவும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் 57 ஆவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு சத்தியாக்கிரகப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந் நிலையில், நேற்று கொழும்பில் நடைபெற்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் போராட்டத்தின்போது

2▶

## ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும்! மகாநாயக்க தேரரிடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்



ஆசிரியர் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்படும் என அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கண்டிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இன்று

மல்வத்து மகா மகாநாயக்க திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர் மற்றும் அஸ்கிரி மகாநாயக்க வரக்காகொட

2▶

## ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சிகளுக்கு தெளிவுபடுத்துங்கள்!

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தற்போதைய அரசியலமைப்பு ரீதியிலான ஒதுக்கீடுகள் மற்றும் சட்ட நிலைமைகள் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவுபடுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் மக்கள் ஐக்கிய முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ ஜயவர்தன யாப்பா ராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல் செயலாளர் அலுவலகத்தில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க மற்றும் பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க ஆகியோரை சந்தித்து எழுத்து மூலம் இந்தக் கோரிக்கை கையளித்துள்ளனர்.

2▶

# தலவாக்கலையில் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்

அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து அதிபர், ஆசிரியர்கள் தலவாக்கலையில் இன்று போராட்டம் நடத்தினர்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடுகளை அரசு உடனடியாகத் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கொழும்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தின. இதன்போது அதிபர், ஆசிரியர்கள் மீது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கண்ணீர்ப் புகை வீச்சு, நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் அடிதடி நடத்தினர். இதனை வன்மையாகக் கண்டித்தும், அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தலவாக்கலை பொது பஸ் தரிப்பிடத்துக்கு முன்பாக அதிபர், ஆசிரியர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தேசிய ஜனநாயக ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாலசேகரம் உட்பட அதிபர், ஆசிரியர்கள் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அதிபர், ஆசிரியர்கள்

2▶



### ஜனாதிபதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சகல அரசியல் கட்சிகளுடனும் துரித கலந்துரையாடல் ஒன்றை நடத்தி ஜனாதிபதி தேர்தல் தொடர்பான நிர்வாக நடைமுறைகள் குறித்து தெரிவிக்கப்பட வேண்டுமெனவும் அந்த கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரென-83)

### ஆசிரியர் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீ ஞானரதன தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது, நாட்டின் பிள்ளைகளின் கல்விக்காக ஆசிரியர்கள் காலை வேளையில் பாடசாலைகளில் இருக்க வேண்டியது கட்டாயமானது என்றும், ஏதேனும் காரணங்களுக்காக எதிர்வரும் காலங்களில் அவ்வாறு நடக்காமல் இருக்குமாயின் பாடசாலை மாணவர்கள் தமது கல்வியை இழப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியிருந்தார். (04)

### பல்கலைக்கழகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைக் கண்டித்தும், தமது நியாயமான கோரிக்கையாகக் காணப்படுகின்ற சம்பள உயர்வை உடனடியாகத் தர வேண்டும் எனக் கோரியும் இந்த ஊர்வலத்தை அவர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

வவுனியா பூங்கா வீதியில் உள்ள வவுனியா பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள்பீட கட்டடத் தொகுதியிலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் நகர் வழியாக பழைய பஸ் நிலையத்தைச் சென்றடைந்து நிறைவடைந்திருந்தது. (05)

### ரணிலின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்றும் நாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு, ஒட்டுமொத்த நாடும் பொய்களால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதியால் கண்துடைப்பு நாடகமே அரங்கேற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அவரின் விசேட உரைக்கு ஒஸ்கார் விருதை விட மேலான விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

365 நாட்களும் 24 மணி நேரமும் பொய் சொல்வதையே வழக்கமாகவும், தொழிலாகவும் கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றார் ஜனாதிபதி.

இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லி, இருக்கும் ஒன்றை இல்லையென்று சொல்லி, பொய்யை உண்மையாக்கி, உண்மையைப் பொய்யாக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான மாயையான பயணத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமானால், நாட்டின் உண்மை நிலையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையை இந்த நாட்டு மக்களுக்குச் சொல்ல வேண்டும். எமது நாடு 92 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிக்கின்றது.

இந்தக் கடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களைக் கொண்டுள்ளது. இந்தக் கடன் தொடர்பில் அறியும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது" - என றார். (05)

### தலவாக்கலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பதாதைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

"கல்விச் சமூகத்தின் மீது அடக்குமுறையைப் பிரயோகிக்காதே, எமது உரிமையைக் கேட்பது அரசிடமா? ஐ.எம்.எப்பிடமா?, அதிபர், ஆசிரியர்கள் மீது வன்முறையைப்பிரயோகிக்காதே, அதிபர்,ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (05)

# சீனா பறந்தார் மஹிந்த

நான்கு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை சீனாவுக்குச் சென்றுள்ளார்.

சீனாவின் அமைதியான சகவாழ்வுக்கான ஐந்து கோட்பாடுகள் வெளியிடப்பட்டதன் 70 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் மாநாட்டில் கலந்துகொள்ள அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் விடுத்த அழைப்பையேற்று மஹிந்த ராஜபக்ஷ அங்கு சென்றுள்ளார்.

இந்த மாநாடு சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த விஜயத்தில் மஹிந்த ராஜபக்,ஷ சீனப் பிரதமர் லீ கியாங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் வாங் யீ ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மாநாட்டில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங், பிரதமர் லீ கியாங், வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மற்றும் பல சீன கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

# உடுவிலில் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், உடுவில் தெற்கு பிள்ளையார் கோயில் அருகே உள்ள காணியில் மோட்டார் சைக்கிள் ஒன்று எரிந்த நிலையில் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிள் நேற்று இரவு எரியூட்டப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலையில், காணி உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த சுன்னாகம் பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பொது மலசலக்கூடத்திலிருந்து இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு

நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்தில் உள்ள பொது மலசலகூடத்தில் இருந்து ஆண்கள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று புதன்கிழமை இரவு ருவன்எலியாவைச் சேர்ந்த மொஹமட் இம்தியாஸ் பாசில் (வயது 72) என்ற வயோதிபரின் சடலமும், இன்று காலை பொகவந்தலாவையைச் சேர்ந்த கல்பொகே ஹேவாகே அஜித் நிஸ்ஸங்க (வயது 51) என்ற குடும்பஸ்தரின் சடலமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி இருவரும் மலசலகூடத்தில் வீழ்ந்து கிடந்ததை அவதானித்த பொதுமக்கள், 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு அறிவித்ததையடுத்து சம்பவ இடத்துக்கு வந்தவர்கள் மேற்படி இருவரும் உயிரிழந்துள்ளமையை உறுதிப்படுத்தினர்.

இரண்டு சடலங்களும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்



# ஊடகவியலாளரின் நினைவேந்தல்

ஊடகவியலாளரும் மொழி பெயர்ப்பாளருமான ஜோசப்ஐயா என அழைக்கப்பட்ட வின்சன்புளோரின்ஸ் ஜோசப் அவர்களின் 3ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் அமையத்தின் தலைவர் கு.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றன.

அவரது திருவுருவப் படத்திற்கு அவரது துணைவியார் மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து ஈகைச் சுடரை குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள். (01)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# கிளிநொச்சியில் மாபெரும் வர்த்தகச் சந்தை ஆரம்பம்!





கைத்தொழில் அமைச்சின் கீழான கிளிநொச்சி மாவட்ட விதாதா வள நிலையத்தின் ஏற்பாட்டில் 2024ம் ஆண்டுக்கான மாபெரும் வர்த்தக சந்தை இன்று கிளிநொச்சியில் ஆரம்பமானது. கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தொழில் முனைவோர் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களைக் காட்சிக் கூடங்களில் காட்சிப்படுத்தியிருந்தனர்.

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக, இந்த வர்த்தகச் சந்தை இன்றும் நாளையும் ஆகிய இரு தினங்கள் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. இன்று காலை 9 மணியளவில் பழைய கச்சேரி வளாகத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டு குறித்த வார்த்தக சந்தையை ஆரம்பித்து வைத்தார்.

பற்றிக் கைத்தறி ஆடைகள், கருப்பட்டி, ஒடியல், பனை உற்பத்திப் பொருட்கள், எண்ணை, ஊதுபத்தி, பாரம்பரிய உணவு உற்பத்திகள், அலங்கார பொருட்கள், தாவரங்கள், கைப்பணிப் பொருட்கள், பழங்கள் உள்ளிட்ட உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்ப நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், உள்ளகக் கணக்காய்வாளர், உதவி மாவட்ட செயலாளர், பதில் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர், மாவட்ட விதாதா உத்தியோகத்தர், பிரதேச செயலகங்களின் விதாதா உத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (02)



## நாதஸ்வர வித்துவான் கலாநிதி பஞ்சாபிகேசனுக்கு திங்களன்று சாவகச்சேரியில் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் 2010 ஆம் ஆண்டில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தப்பட்ட நாதஸ்வர வித்துவான் எம். பஞ்சாபிகேசனின் நூற்றாண்டு விழா வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் மருத்துவர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் மூத்த நாதஸ்வர தவில் வித்துவான்கள் பங்குகொள்ளும் இசைக்கச்சேரி, நாதஸ்வரம் பற்றிய சிறப்பு கட்டுரைகளை உள்ளடக்கிய எம்.பஞ்சாபிகேசன் என்ற சிறப்பு மலர் வெளியீடு, பஞ்சாபிகேசன் குறித்து சான்றோர் ஆற்றும் உரைகள், மூத்த நாதஸ்வர தவில் கலைஞர்களுக்கான பஞ்சாபிகேசன் நினைவுத் தங்கப் பதக்கம் வழங்கல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கலாநிதி பஞ்சாபிகேசன் 91 ஆண்டுகள் இம்மண்ணில் வாழ்ந்தவர் என்பதுவும் தனது 85 ஆவது வயது வரை நாதஸ்வர இசைக்கச்சேரிகள் செய்த மூத்த கலைஞர் என்பதுவும் குறிப்பிடத்தக்கன.




## பிரான்சில் தமிழ்ச்சோலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் 2024




பிரான்சில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தமிழர் விளையாட்டுத்துறையின் ஆதரவில் பிரான்சு தமிழ்ச்சோலைத் தலைமைப் பணியகமும் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பும் இணைந்து நடாத்தும் தமிழ்ச்சோலைப் பள்ளிகளிடையிலான தமிழ்ச்சோலை இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் - 2024 இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் தெரிவுப் போட்டிகளும் ஜூலை 6 ஆம் திகதி சனிக்கிழமை இறுதிப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# ஜனாதிபதியின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது! யாழ்ப்பாணத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு



"சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் இலங்கையில் வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும்" என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இன்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்ப ிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை நாடியிருந்த போதிலும் தமது தலைமையில் 17 ஆவது தடவை சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் வெற்ற ியளித் துள்ளதாக ஜனாதிபதி கூறுகின்றமை தவறான கருத்தாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் கடந்த 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த தவறியமையே தோல்வி ஏற்படுவதற்கு காரணமாக அமைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 17 ஆவது தடவை சர்வதேச நாணய நிதியத்தை நாடியபோது அனைத்து நிபந்தனைகளும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டதனையே வெற்றியளித்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாகவும் சுரேஷ பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் நடைமுறைப்படுத்தகப்பட்டதன் ஊடாக வரி மற்றும் வாழ்க்கை செலவு அதிகரித்துள்ள நிலையில் வங்குரோத்துநிலையில் இருந்து நாடு விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாதவிடயமாகும் எனவும் சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாட்டில் 60 வீதத்திற்கு மேற்பட்ட மக்கள் வறுமைக்கோட்டின்கீழ் வாழ்வதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், நாட்டின் பொருளாதார நிலை வரி மற்றம் விலையேற்றம் காரணமாக வறுமைக்கோட்டில் வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். (04)

## நாடு கடன் சுமையில் இருக்கையில் 'சுப ஆரன்ச்சியக்' என நற்செய்தி கதை கூறி ஆட்சியாளர்கள் மக்களை ஏமாற்றுவதற்கு முனைகின்றனர்

### எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சீற்றம்



நாடு 9,200 கோடி டொலர் கடனில் உள்ள நிலையில் மேலும் 100 கோடி டொலர்களுக்கு மேல் கடன் வட்டி உள்ள நிலையில் ஆட்சியாளர்கள் 'சுப ஆரன்ச்சியக்' என நற்செய்தி கூறி மக்களை ஏமாற்றி வருவதாக எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு கடுவலை முனிதாச குமாரதுங்க பாடசாலைக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிக கடன் மதிப்பெண்கள் குறித்து சாதாரண மக்கள் மத்தியில் ஒரு தெளிவு நிலை இருக்க வேண்டும் எனவும் அப்போதே ஆட்சியாளர்கள் இனியும் மக்களை தவறாக வழிநடத்தவோ அல்லது ஏமாற்றவோ முடியாதிருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதாக கூறி நாட்டின் உழைக்கும் மக்களின் தோள்களில் அதிக சுமையை சுமத்தியுள்ள அதேவேளை வெளிநாட்டுக் கடனாளிகளுக்கு அதிக சலுகை ஏற்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளனர் என்பதை இந்நாட்டின் மக்கள் நன்றாக புரிந்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஊழியர்சேமலாப நிதியில்கூட கைவைத்துள்ளதாகவும், இது தொடர்பில் பாடசாலை மாணவர்களும், குடிமக்களும் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும், இல்லையெனில் நாட்டின் 220 இலட்சம் மக்கள் ஆட்சியாளர்களின் தாளத்திற்கு ஆட வேண்டிய நிலைமையே ஏற்படும் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் மக்களின் அரசியல் கல்வியறிவு அதிகரிக்க வேண்டும், ஆட்சியாளர்கள் கூறுகின்ற அனைத்தையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது எனவும் எதனையும் விமர்சன ரீதியாகப் பார்ப்பதற்கு மக்கள் பழக வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ரென-81)

## முட்டை விற்று ஹெலிகொப்டர் வாங்கிய அசகாய தொழிலதிபர்

முட்டை உற்பத்தியில் ஈடுபடாத தொழிலதிபர் ஒருவர், முட்டைகளை சேகரித்து சேமித்து களஞ்சியப்படுத்தி வைத்து பின்னர் மொத்தமாக அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் கிடைத்த வருமானத்தில் ஹெலிகொப்டர் வாங்கியுள்ள செய்தியொன்று வெளியாகியுள்ளது.

முட்டைக்கு விலைக் கட்டுப்பாடு இல்லாத சூழலில், இன்றைய சந்தையில் ஒரு முட்டை வெவ்வேறு விலையில் விற்கப்பட்டு வரும் நிலையில், தற்போது முட்டையொன்று 47 ஷரூபாய் முதல் 52 ஷரூபாய் வரை விலைகளில் விற்கப்படுகின்றது. சூப்பர் மார்க்கெட்களில் அட்டைப்பெட்டியில் அடைக்கப்பட்ட முட்டையொன்று 60 முதல் 65 ஷரூபாய் விலையில் விற்கப்படுகிறது.

முட்டை விலை அதிகரிப்பு மற்றும் முறையான விலைக் கட்டுப்பாடு இல்லாமை தொடர்பில் கடந்த 25 ஆம் திகதி விவசாய அமைச்சில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கோழித் தீவனச் செலவு உட்பட ஒரு முட்டையை உற்பத்திச் செய்வதற்கான செலவு 31 ஷரூபாய் என தெரியவந்துள்ளது. முட்டைகளை மொத்தமாக சேமித்து வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் தொழிலதிபர் ஒருவர் ஹெலிகொப்டர் வாங்கியுள்ளதான தகவல் இந்த கலந்துரையாடலின் போதே வெளியாகியுள்ளமை குரிப்பிடத்தக்கது. (ரென-82)

## டயானா கமகேவுக்கு எதிரான வழக்கு விசாரணையிலிருந்து நீதிபதிகள் விலகல்!



முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைகளில் இருந்து இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகள் விலகியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்து உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே, ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்த கருத்துக்களால் நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு வெலிகம மாநகர சபையின் தலைவர் ரெஹான் ஜயவிக்ரமவினால் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில, நேற்று உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதியரசர்களான ஜனக் டி சில்வா மற்றும் குமுதினி விக்கிரமசிங்க ஆகியோர் இந்த வழக்கில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளனர். இந்த வழக்கு ஒகஸ்ட் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)



## இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் இராஜினாமா!

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப்பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

"சர்வதேசப் பயிற்சியாளராக செயற்படுவதனால் குடும்பத்தினரிடமிருந்து நீண்ட காலம் விலகி இருக்க வேண்டியுள்ளது. எனது குடும்பத்தினருடனான நீண்ட உரையாடல்களுக்குப் பிறகு, நான் வீடு திரும்புவதற்கும் குடும்பத்தினருடன் நேரத்தை செலவிடுவதற்கும் தீர்மானித்துள்ளேன்" என சில்வர்வுட் தெரிவித்துள்ளதாக ஸ்ரீ லங்கா கிரிக்கெட் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன்னுடைய பதவிக்காலத்தின் போது இலங்கை அணி வீரர்கள், ஏனைய பயிற்சியாளர்கள் மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிர்வாகத்தின் ஆதரவுக்கு கிறிஸ் சில்வர்வுட் நன்றி தெரிவித்துள்ளார்.

கிறிஸ் சில்வர்வுட்டின் பதவிக்காலத்தின் போது இலங்கை அணி 2022 ஆம் ஆண்டு ரி-20 ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியதுடன், 2023 ஆம் ஆண்டு 50 ஓவர் ஆசிய ஆசியக் கிண்ணத்தின் இறுதிப் போட்டிவரை வந்திருந்தது. அத்தோடு, இலங்கை அணி பல்வேறு கிரிக்கெட் தொடர்களிலும் வெற்றிகளைப் பெற்றிருந்தது.

கிறிஸ் சில்வர்வுட்டின் பதவிக் காலத்தின் போது அவர் ஆற்றிய பங்களிப்புக்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நன்றி தெரிவித்துள்ளதுடன், அவரின் எதிர்கால முயற்சிகளுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி அடைந்த மோசமான தோல்விகளையடுத்து பயிற்சி ஆலோசகராக இருந்த மஹேல ஜெயவர்த்தனவும் தனது பொறுப்பிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# ஆடிவேல் உற்சவத்தை முன்னிட்டு உகந்தையில் பாரிய சிரமதானம்!





(வி.ரி.சகாதேவராஜா)

உகந்த மலை முருகன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவத்தையொட்டியும் கதிர்காமம் பாதயாத்திரையை ஒட்டியும் காரைதீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உகந்தையில் சிரமதானமொன்றை நேற்று மேற்கோண்உடனர்.

காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுல் நாயகி சஜிந்திரனின் வழிகாட்டலில் இந்த ஆண்டிற்கான உகந்தை முருகன் ஆலய சிரமதான நிகழ்வுகள் நிருவாக உத்தியோகத்தர் த.கமலநாதன் தலைமையில் இடம்பெற்றன.

இதன்போது பாதயாத்திரை செல்பவர்களால் இயற்கை மற்றும் விலங்குகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் முகமாக "பொலித்தீன் பாவனையை தடுத்தல் மற்றும் நீரினை கண்ணியமாக பயன்படுத்துதல் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகள் ஆங்காங்கே பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் காட்சிப்படுத்தப்பட்டன.



# ஆலையடிவேம்புப் பிரதேச செயலக பிரிவில் இலவச அரிசி விநியோகம்

(எம்.எம்.றம்ஸீன்)

நிதிப்பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் மகளிர் சிறுவர் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஊடாக இலவச அரிசி விநியோகத்தின் இரண்டாம் கட்டம் இடம்பெற்று வருகின்றது.

இதற்கமைவாக ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவி லும் அரிசி விநியோகம் இரண்டாம்கட்டம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் ஊட்டச்சத்து மட்டத்தை தொடர்ச்சியாக பேணுவதற்கான அரசாங்கம் உணவு பாதுகாப்பு திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ் தலைமையில் இடம்பெற்ற இரண்டாம் கட்ட இலவச அரிசி வழங்கும் நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன்மாவட்ட அரச உயர்அரிகாரிகள்ஆலையடிவேம்பு பிரதேச செயலக கணக்காளர் க.பிரகஸ்பதி தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர் என். கிருபாகரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 7,302 குடும்பங்கள் இலவச அரிசி பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்கப்படவுள்ளமை குறிப பிடத்தக்கது.

# பெண்கள் வலைப்பந்தாட்டப் போட்டியில் செங்கலடி மத்திய கல்லூரி சம்பியனானது



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்குடா வலயமட்ட 16 வயதிற்குட்பட்ட பெண்களுக்கான வலைப பந்தாட்டப் போட்டியில் செங்கலடி மத்திய கல்லூரி மாணவர்கள் முதலிடத்தைப் பெற்று கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகி யுள்ளனர்.




# ஹுரியத், நிகதலுபொத அல் - ஹிக்மாவிற்கு ஸ்மார்ட் வகுப்பறை உபகரணம் வழங்கி வைப்பு




(எம்.எம்.றம்ஸீன்)

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 247 ஆவது கட்டமாக ஷரூபாய் 1,177,000 பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், ஹிரியால, நிகதலுபொத, தித்தவெல்கால அல் - ஹிக்மா முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ஷரூபா நிதியுதவியும் வழங்கி வைத்தார்.

# பறவைக் காய்ச்சல் பரவியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் மற்றும் விலங்குணவுகள் இறக்குமதி நடக்காது!



பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்குணவுகளை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கமைய, தற்போது இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதியும் நிறுத்தப்பட்டுள்ளது.

பல நாடுகளில் தோன்றியுள்ள பறவைக் காய்ச்சல் வைரஸ் இலங்கையிலும் உள்நுழைவதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மாடுகளிலும் இந்நோய் பதிவாகியுள்ளதால், இது குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாகவும் இலங்கையில் பறவைக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்க கண்காணிப்புத் திட்டம் பலப்படுத்தப்பட்டுள்ளதால், பறவைக் காய்ச்சல் குறித்து தேவையற்ற அச்சத்தை கொள்ள வேண்டாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ரென-86)

# ஊடகவியலாளரின் கைப்பேசியை பறித்து யானையின் வாயில் போட்ட யானைப்பாகன்

## கல்கமுவவில் நடைபெற்ற வினோத சம்பவம்

கல்கமுவ நகரில் நேற்று முன்தினம் இரவு (23) இடம்பெற்ற வருடாந்த மிஹிது பெரஹர நிகழ்வின் போது, கடும் போதையில் இருந்த யானைப்பாகன் ஒருவர், மேற்படி ஊர்வலத்தை செய்தி சேகரிக்கச் சென்ற கல்கமுவ பிரதேச ஊடகவியலாளரின் கையடக்கத் தொலைபேசியைப் பறித்து யானையின் வாயில் போட்டுள்ளார்.

அந்த அப்பிள் ஐஃபோனை விழுங்க மறுத்த யானை ஐஃபோனை வாயிலிருந்து வெளியே தூக்கி எறிந்தது. அப்போது அந்த கைப்பேசி வீதியோரத்தில் விழுந்து சிதறியது. இந்த ஐஃபோனின் விலை ரூபாய் ஒன்றரை லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஊடகவியலாளர் கல்கமுவ பொலிஸ் நிலையத்தில் இது தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளதாகவும், சம்பவம் நடந்த அன்றிரவே யானைப்பாகன் யானையுடன் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ரென-85)

# வெள்ள நிலைமை ஏற்படாமல் தடுக்க விசேட செயற்றிட்டம்

கொழும்பு மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் அறிக்கை கோருமாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க கொழும்பு மாவட்டத்தின் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

நேற்றைய தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற துறைசார் நிறுவனங்களின் தலைவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இயற்கை காரணங்களைப் போன்று, ஒழுங்கற்ற மனித செயற்பாடுகளும் வெள்ள நிலைமை ஏற்படக் காரணமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்காலத்தில் மீண்டும் இதுபோன்ற வெள்ள நிலைமை ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்களை விரைவாகத் தயாரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (04)






# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் சத்தியாக்கிரகமும் பேரணியும்!





(நூருல் ஹுதா உமர்)

கடந்த 57 நாட்களாக இலங்கையில்உள்ள அனைத்து பல்கலைக் கழகங்களினதும் கல்விசாரா ஊழியர்கள்தங்களது பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராடி வருகின்றனர்.

அவர்களது போராட்டம் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம், சத்தியாக்கிரகப் போராட்டம்எனபல முனைகளில் முன்னெடுக்கப்படுகிறது.

அந்தவகையில், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இன்றைய தினம் ஒருபக்கம் ஊழியர்களின் சத்தியாகிரகப் போராட்டமும், மறுபுறம் நியாயம் கோரி பேரணியும் இடம்பெற்றன.

இங்கு கருத்துத் தெரிவித்த தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத் தலைவர் எம். ரி.எம். தாஜ/டீன் மற்றும் ஊழியர் சங்கத்தின் செயலாளர் முகமது காமில் ஆகியோர், சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலாக அரசு எங்களுடைய நியாயமான கோரிக்கையைப்பூர்த்தி செய்து பல்கலைக்கழகத்தை சுமூக நிலைக்கு கொண்டு வராது நமது நாட்டின் சொத்துக்களான மாணவர்களது கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கின்றது.

அரசியல்நோக்கங்களுக்காக பல மில்லியன்களை செல விடும் அரசு, நாட்டின் அபிவி ருத்திக்கு துணைநின்று, உதவக்கூடிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத திற்குக் கைகொடுக்கும் பல்கலைக் கழகங்களின்பிரச்சனைகளைக் கண்டறிந்து அவைகளுக்கு தீர்வை வழங்காது, அரச பல்கலைக் கழகங்களை வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல முயற்சிப்பதாகவும் இங்கு பணிபுரியும் ஊழியர்களின் பின்னாலும் கணிசமான வாக்குகள் இருப்பதை சம்மந தப்பட்டவர்கள் உணரவேண்டும் என்றும் கருத்துக் கள் முன் வைக்கப்பட்டன.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.06.2024இல் வெளியிடப்பெற்றது.